செ.வெ.எண்:07/2018 நாள்:04.05.2018

சிவகங்கை மாவட்டம்

**பள்ளி வாகனங்களின் பாதுகாப்பு தன்மை குறித்து ஆய்வு செய்ததுடன் வாகன ஓட்டுநர்கள் பணியின் போது கவனம் சிதறல் இருக்கக்கூடாது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் வேண்டுகோள்.!!!**





சிவகங்கை வட்டார போக்குவரத்துத் துறையின் ஓட்டுநர் பயிற்சி மைதானத்தில் இன்று (04.05.2018) வட்டார போக்குவரத்துத் துறையின் மூலம் பள்ளி வாகனங்களுக்கு வருடாந்திர ஆய்வு மேற்கொள்ளும் பணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமை வகித்து பள்ளி வாகன ஓட்டுனர்களுக்கான கருத்தரங்கு விழாவில் பேசுகையில்,

இந்த வாகன ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கையை தலைமையிடமாக கொண்டு 80 பள்ளிகளிலுள்ள 250 பள்ளி வாகனங்களுக்கும், காரைக்குடியை தலைமையிடமாக கொண்டு 50 பள்ளிகளிலுள்ள 228 பள்ளி வாகனங்களுக்கும் என மொத்தம் 478 பள்ளி வாகனங்களுக்கு இன்று முதல் வாகன ஆய்வுப் பணி துவங்கப்படுகிறது. இப்பணியானது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடத்தப்பட்டு 30.05.2018-க்குள் மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி வாகனங்களையும் ஆய்வு செய்து குறைபாடுகளை கண்டறிந்தால் உடனடியாக சரிசெய்து வர அறிவுறுத்தப்பட்டு வருகின்றன. சரி செய்யாத வாகனங்களை இயக்குவதற்குரிய அனுமதி கண்டிப்பாக வழங்க இயலாது. இதன் நோக்கம் பொதுமக்களும் பள்ளிச் சிறார்களும் பாதுகாப்பின் நலன் முன்னிட்டேயாகும். அந்த வகையில் பள்ளி வாகன ஓட்டுனர்கள் பொதுவாக அனுபவம் வாய்ந்தவர்களாகத்தான் இருப்பீர்கள். இருந்த போதிலும் பணியின் போது எப்பொழுதுமே கவனமுடன் இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் பல்வேறு இன்னல்கள் இருக்கலாம். அந்த நிலையில் பணியை மேற்கொள்ளும் போது கவனக்குறைவு தன்னை அறியாமலேயே ஏற்படத் தோன்றும். அவ்வாறு கவனச்சிதறல் ஏற்படும் நிலையில் விபத்து போன்ற நிலை உருவாகும். அதை தடுக்க வேண்டுமென்றால் முதலில் நீங்கள் உங்களை பாதுகாக்கின்ற நிலை உறுதிசெய்ய வேண்டும். நீங்கள் உங்களைப் பாதுகாத்துக் கொண்டால் மற்றவர்களை கண்டிப்பாக உங்களால் பாதுகாக்க முடியும். ஒவ்வொரு மனிதப்பிறவியும் அறிய பிறவியாகும். அதிலும் ஊனமின்றி வாழ்வது என்பது மிகவும் சிறப்பு. எனவே ஒவ்வொரு மனிதனும்

முழு ஆரோக்கியத்துடன் உடல் உறுப்பு குறைபாடுடின்றி வாழவேண்டும் என்பதே இயல்பு. அதை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவது விபத்தின்றி வாழ்வதே அதன் பெரும் பங்காகும். எனவே ஓட்டுனர் பணி என்பது அவ்வளவு எளிதல்ல. அத்தகைய திறமை வாய்ந்த ஒரு பணியை நாம் மேற்கொள்ளும் போது நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை மற்றவர்களுக்கு முன்உதாரணமாக திகழ்திடும் வகையில் தமது பணி இருந்திட வேண்டும். மேலும் நீங்கள் உங்கள் வாகனத்தில் ஏற்றிச்செல்ல சிறார்கள் ஒன்றும் அறியதாவர்கள். அவர்களின் பாதுகாப்பு உங்களின் பணியில்தான் உள்ளது. அதற்கேற்ப மாணவ, மாணவியர்களை ஏற்றிச் செல்லும் போது தேவையற்ற நிலைகளில் மற்ற வாகனங்களை முந்திச் செல்லக் கூடாது. உரிய விதிமுறைகளை கடைபிடித்து வாகனங்களை இயக்க வேண்டும். வாகனங்களை இயக்கும் போது செல்போன் பயன்படுத்தல் கூடாது. ஒவ்வொரு நாளும் வாகனத்தை இயக்குவதற்கு முன் தினசரி பராமரிப்புப் பணிகளை முடித்த பின்னர் தான் வாகனத்தை இயக்க வேண்டும். இதுபோல் ஒவ்வொரு ஓட்டுனரும் அரசு வெளியிடும் விதிமுறைகளை முழுமையாக கடைபிடித்து விபத்தின்றி சிறப்பாக வாகனங்கள் இயங்கி வரும் மாவட்டமாக திகழ்திட செய்வது ஓட்டுனர்களாகிய உங்கள் கையில் தான் உள்ளது. எனவே கவனக்குறைவின்றி சிறப்பாக செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து பள்ளி வாகனங்களுக்கான ஆய்வு நடைபெற்று வந்ததை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் முகப்பு விளக்குகள் சரியாக இயங்கி வருகிறதா என்றும் மேலும் வாகனத்தின் வலது மற்றும் இடது எச்சரிக்கை விளக்குகள் சரியாக உள்ளதா எனவும் மற்றும் வாகனத்தில் அவசரகால வழி பொருத்தப்பட்டு சரியாக செயல்பட்டு வருகிறதா என பார்வையிட்டதுடன் வாகன உள்புறத்தில் முதலுதவி பெட்டி, தீ தடுப்பு கருவி, வேகக்கட்டுப்பாட்டு கருவி, ஒலிபெருக்கி கருவி ஆகியவை சரியாக பொருத்தப்பட்டுள்ளதா என பார்வையிட்டதுடன் வாகனத்தில் பள்ளி மாணவ, மாணவியர்கள் அமர்வதற்கு ஏற்ப உரிய இடைவெளி விட்டு இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளதா எனவும் அதேபோல் வண்டியின் உட்புறத்தில் எந்தஒரு இடைவெளியின்றி உட்கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதா என பார்வையிட்டதுடன் அரசு விதிமுறைப்படி பள்ளி வாகனம் என்ற விளம்பர பலகை, உரிமையாளர்கள் முகவரி, தொலைபேசி எண்கள், அருகாமையிலுள்ள காவல் நிலைய தொலைபேசி எண்கள் மற்றும் வாகனப் பராமரிப்பு குறித்த விவரங்களின் தொகுப்பு ஆகியவை வாகனத்தில் இருந்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் அறிவுறுத்தினார்.

பின்னர் மாவட்ட தீயணைப்புத்துறையின் மூலம் பள்ளி வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தீ தடுப்பு கருவியின் செயல்பாடு குறித்து அனைத்து வாகன ஓட்டுநர்களுக்கும் செயல்விளக்க முறை நடத்தப்பட்டது. அதன்படி ஒவ்வொரு ஓட்டுநரும் தீ தடுப்பு கருவியின் செயல் குறித்து நன்றாக தெரிந்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டி.ஜெயச்சந்திரன்,இ.கா.ப., வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.திருவள்ளுவன், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் திரு.முருகன், வருவாய் கோட்டாட்சியர் திரு.இராமபிரதீபன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஆஞ்சலோ இருதயசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.**